செய்தி வெளியீடு எண்: 485 நாள்: 13.08.2019

**<u>இன்று (13.08.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை:</u>**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அருளாசியோடு, இன்றைய தினம் வேளாண் பெருமக்களின் கோரிக்கையை ஏற்று, வருகை தந்திருக்கின்ற விவசாயிகள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் முன்னிலையிலே இன்றைக்கு மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்கான தண்ணீர், என்னால் திறந்து விடப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மேட்டூர் அணை 101 அடியை எட்டியுள்ளது, அணையில் 66 டி.எம்.சி தண்ணீர் இருக்கிறது. மேலும் இப்பொழுது 2 லட்சத்து 30 ஆயிரம் கன அடி தண்ணீர் அணைக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அணை முழு கொள்ளளவான 120 அடியை எட்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இன்னும் பருவமழை பெய்யவில்லையே, இன்றைக்கு விவசாயிகளுக்கெல்லாம் தண்ணீரை எப்படி திறப்பது என்று எண்ணிக்கொண்டு வேதனை பட்டுக்கொண்டிருந்தேன். திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்துவிட்ட வந்தவுடனே மழை பொழியும், ஆனால் இந்த முறை கொஞ்சம் காலதாமதமாக பெய்திருக்கிறது. இருந்தாலும், நாம் நினைத்தபடி எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அருளாசியோடு ஏழுமலையானுடைய அருளாசியோடு, இன்றைய தினம் மேட்டூர் அணைக்கு சுமார் 2 லட்சத்து 30 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து

கொண்டிருக்கிறது. ஆகவே, அணை முழு கொள்ளளவை எட்டும். நம்முடைய விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான நீர் முழுவதும் இந்த ஆண்டு வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்கின்றேன். அம்மாவினுடைய அருளாசியோடு படிப்படியாக தண்ணீர் திறக்கப்பட்டு, வருகின்ற நீரைப் பொறுத்து, நம்முடைய விவசாயிகளுக்கு தேவையான அளவிற்கு தண்ணீர் திறக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பாசன வசதியை பெறுவர் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த தண்ணீர் திறப்பின் மூலமாக, சுமார் 16.05 இலட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகின்றது. மிகப்பெரிய பாசனம் பெறுகின்ற ஒரு ஜீவநதி என்று சொன்னால் அது காவேரி நதி தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தேவைப்படும் மொத்த நீரின் அளவு சுமார் 339 டிஎம்சி ஆகும். மேட்டூர் அணையிலிருந்து 220 டிஎம்சி தண்ணீர் மற்றும் மீதமுள்ள 119 டிஎம்சி தண்ணீர் வடகிழக்கு பருவமழை மூலமும் உறுதி செய்யப்படும். மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாய்களுக்கு இன்று முதல் 132 நாட்களுக்கு மேட்டூர் அணையிலிருந்து விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் திறக்கப்படும், இதனால் சுமார் 45,000 ஏக்கர்நிலம் பாசனம் பெறுவதால் ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருமக்கள் பயன்பெறுவார்கள். இதற்காக சுமார் 9.6 டிஎம்சி தண்ணீர் தேவைப்படும். மேலும் காவேரி ஆற்றிலிருந்து சுமார் 155 திட்டங்களின் மூலம் தினசரி 1700 மில்லியன் லிட்டர்–க்கும் மேற்பட்ட தண்ணீர் 8 மாவட்டங்களிலுள்ள பொதுமக்களின் குடிநீருக்காக

பயன்படுத்தப்படுகின்றது. மேலும், 20 மாவட்ட மக்களுக்கு காவேரி நீர் குடிநீர் ஆதாரமாகவும் திகழ்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல், நீர் மின் நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும், சுரங்க மின் நிலையங்கள் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும், ஆகமொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைக்கின்றது. மேலும், காவேரி ஆற்றின் குறுக்கே உள்ள 7 கதவணை நீர் மின் நிலையங்கள் மூலம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேட்டூர் அணை கட்டப்பட்டதிலிருந்து பல்லாண்டு காலமாக தூர்வாரப்படாமல் இருந்தது, அந்த தூர்வாருகின்ற நிகழ்ச்சியும் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில்தான் நடைபெற்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், 1949 விவசாயிகள் 2.70 லட்சம் கனமீட்டர் அளவு வண்டல் மண்ணை எடுத்துச் சென்று பயனடைந்துள்ளனர். 19.7.2018 அன்று தண்ணீர் திறந்து விடுகின்றபொழுது, 109 அடி இருந்தது, அணையினுடைய நீரின் அளவு 71 டிஎம்சி இருந்தது. சென்ற ஆண்டு மேட்டூர் அணையிலிருந்து 210 டிஎம்சி தண்ணீர் பாசனத்திற்காக நாம் திறந்து விட்டோம். அதுமட்டுமல்லாமல், விவசாயப் பெருங்கடி மக்களுக்குபோதுமான விதை, நெல், உரம் ஆகியவையெல்லாம் இன்றைக்கு இருப்பு இருக்கின்றது. விவசாய பெருங்குடி மக்களுக்கு தேவையான அளவு உரிய நேரத்தில் வழங்கப்படும். காவேரி டெல்டா விவசாய பெருங்குடி மக்கள் மற்றும் மேட்டூர் கால்வாய் பாசன பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் நீரை பங்கீட்டு, நிலைமைக்கேற்ப தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி ஒத்துழைக்குமாறும், மிக அதிக மகசூல் பெற்று பயன்பெற வேண்டுமென்றும் விவசாயப் பெருங்கடி மக்களை கேட்டுக் கொள்கிறேன். இந்த

ஆண்டு வருண பகவானின் கருணையால் டெல்டா பாசன விவசாயிகளுக்குத் தேவையான நீர் வழங்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. இன்றைய தினம், மேட்டூரில் 101 அடி தண்ணீர் இருக்கிறது, 66 டிஎம்சி தண்ணீர் தற்போது இருப்பு இருக்கின்றது. தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இப்போது கர்நாடகத்தில் கபினியிலிருந்தும் மற்ற அணைகளிலிருந்தும் தண்ணீர் திறக்கப்பட்டிருக்கின்றது, போதுமான தண்ணீர் திறக்கப்படும். ஏனென்றால், கர்நாடகத்தில் 4 அணைகளுமே நிரம்பிவிட்டன. ஆகவே, இனி பெய்கின்ற மழைநீர் முழுவதும் கர்நாடகத்திலிருந்து 4 அணைகளின் வழியாக மேட்டூர் அணைக்கு வந்து சேரும். இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ அதை நிறைவேற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு கடுமையான வறட்சி தமிழகத்தில் நிலவினாலும்கூட, டெல்டா பாசன விவசாயிகளுக்குத் தேவையான நீரை இறைவனுடைய அருளால் மேட்டூர் அணை நிரம்பி, இன்றைக்கு பாசன விவசாயிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்குத் தேவையான திட்டங்களை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஒரு சொட்டுநீர் கூட வீணாகாமல் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். ஏரிகள், குளங்கள் முழுவதிலும் வண்டல் மண் அள்ளப்படுகின்றது. அதனை விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுத்துகின்றார்கள்.

இந்தக் குடிமராமத்துத் திட்டத்தை பொறுத்தவரைக்கும் முழுக்க முழுக்க விவசாயிகள்தான் அந்தத் திட்டத்தை எடுத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாக, இந்தத் திட்டம் ஒரு வெற்றிகரமாக அமையும் என்ற முறையிலே இந்தத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். 2017–2018–ஆம் ஆண்டு 1,519 ஏரிகளுக்கு பரீட்சார்த்த முறையில் ரூபாய் 100 கோடி ஒதுக்கி அந்தப் பணியை துவக்கினோம். விவசாயிகளிடத்திலே அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்ததன் விளைவாக, 2018–2019–ஆம் ஆண்டு 1,511 ஏரிகள் எடுக்கப்பட்டு ரூபாய் 328 கோடி இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணி முடிவுறும் நிலையில் இருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு வலு சேர்க்கும் விதமாக, விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் விதமாக சுமார் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில், சுமார் 1,829 ஏரிகள் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறையின் கீழ் இருக்கின்ற 14,000 ஏரிகளும் படிப்படியாக தூர்வாரப்படும். ஆகவே, பொதுப்பணித் துறைக்கு சொந்தமான ஏரி, குளம், குட்டை போன்றவற்றை தூர்வாருவதற்கு ரூபாய் 1,250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணியும் இன்றைக்கு துவங்கப்பட்டு விட்டது. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருக்கின்ற குளங்கள், ஏரிகள், குட்டைகள் அனைத்தும் தூர்வாரப்பட்டு, பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகக்கூடாது என்பதற்காக ஓடையின் குறுக்கே, நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டப்படுகின்றது, இதற்காக அம்மாவினுடைய அரசால் ரூபாய் 1000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூபாய் 600 கோடி செலவழிக்க திட்டம் தீட்டப்பட்டு செயலாக்கத்திற்கு வந்திருக்கின்றன. மேட்டூர் அணையிலிருந்து கொள்ளிடம் வரை கிட்டத்தட்ட 5 தடுப்பணைகள் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது, 2 தடுப்பணைகள் கட்டுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டோம். மேலும் 3 தடுப்பணைகள் கட்டுவதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது, அதற்குண்டான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது.

அதுமட்டுமல்ல, கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியே தீரும். அதை நிறைவேற்றுகின்றபொழுது, நமக்கு தேவையான நீர் கிடைக்கும். 125 டிஎம்சி தண்ணீர் கிடைப்பதாக மத்திய அரசு தெரிவித்திருக்கிறார்கள். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவங்கிவிட்டது என்ற செய்தியையும் தெரிவித்திருக்கிறார்கள். கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம் கரூரில் இணைக்கப்படும். அதற்கு மேல் உள்ள பகுதிகள் அனைத்தும் நீரேற்று மூலமாக இரண்டு பகுதியில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான நீரை கொடுப்பதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன். இப்பொழுதுகூட, மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, சேலம் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 100 ஏரிகளுக்கு ரூபாய் 565 கோடி செலவில் இன்றைக்கு மேட்டூர் உபரிநீரை தேக்கி வைக்க இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு.கருப்பணன் அவர்கள்,

சட்டமன்ற உறுப்பினர் அந்தியூர் ராஜா அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள், என்னுடைய பகுதி வறட்சியான பகுதி, ஆகவே, Lift irrigation மூலமாக, பருவமழை காலங்களில் மேட்டூரிலிருந்து வெளியேறுகின்ற உபரிநீரை எங்கள் பகுதிக்கும் திருப்பிவிட வேண்டும், எங்கள் பகுதியில் இருக்கின்ற ஏரிகளிலும் நிரப்ப வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அரசு அதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம் வருகின்றபொழுது, அந்தப் பகுதி மக்களுக்கும், ஈரோடு மாவட்டத்திலிருக்கின்ற பாசனம் பெறாத அந்த ஏரிகளுக்கும் மேட்டூர் உபரிநீரை தண்ணீர் கொண்டு சென்று நிரப்பப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற கெங்கவள்ளி, ஆத்தூர், ஏற்காடு சட்டமன்ற தொகுதியில் இருக்கின்ற மக்களுக்கும் Lift irrigation மூலமாக தண்ணீர் ஏற்றப்பட்டு அங்கு இருக்கின்ற ஏரிகள், குளங்கள் நிரப்பப்படும். அதேபோல, மேட்டூர் அணையிலிருந்து கரூர் வரையிலுள்ள இரண்டு பகுதியிலும் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறுகின்ற விதமாக அங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் முழுவதும் நிரப்புகின்ற விதமாக உபரிநீரை Lift irrigation மூலமாக நிரப்பப்படும் என்ற செய்தியையும், இதற்காக 25 கோடி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, ஒரு சொட்டுநீர் கூட வீணாகக்கூடாது என்ற அடிப்படையில் எங்களுடைய அரசால் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். இதற்காக 2 ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர்கள், 3 ஓய்வு பெற்ற கண்காணிப்பு பொறியாளர்களை நியமித்து, பருவமழை காலங்களில் எங்கெங்கெல்லாம் மழைநீர் வீணாக கடலில் கலக்கின்றதோ

அதையெல்லாம் கணக்கிட்டு, அந்த தண்ணீரை எப்படி பயன்படுத்துவது என்று திட்டம் தீட்டி எங்களுக்கு அறிக்கையாக தர இருக்கின்றார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில், அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு விவசாயிகளுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஒரே அரசு எங்களுடைய அரசு என்பதை வெளிப்படையாக சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நீர் ஆதாரத்தை பெருக்க வேண்டும், விவசாயிகள் இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக சொட்டுநீர் பாசனத் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். சொட்டுநீர் பாசனத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்த அரசு எங்களுடைய அரசு. ஒரு ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருந்தால் 100 சதவீதம் மானியமும், அதற்கு மேல் எத்தனை ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும், 75 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனக் கருவிகளை விவசாயிகளுக்குத் தருகிறோம். எனவே, நிலத்தடி நீர் குறைவாக இருந்தால்கூட, சொட்டுநீர் பாசனத்தின் மூலமாக வேளாண் பணிகளை மேற்கொள்கின்ற பொழுது, விவசாயிகள் குறைந்த தண்ணீரில் அதிக விளைச்சலை பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம். வேளாண் பெருமக்களுக்குத் தேவையான டிராக்டர், வேளாண் கருவிகள், விதைகள், உரம் மானிய விலையில் கொடுக்கின்றோம். வட்டியில்லாத பயிர்க்கடன் கொடுக்கிறோம். இவ்வாறு அனைத்தையும் முழுமையாக கொடுக்கின்ற ஒரே அரசு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றிற்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக சேலம் மாவட்டத்தில் ஓமலூரிலிருந்து தாரமங்கலம் செல்கின்ற வழியில் மிகப் பெரிய

மார்க்கெட் ஏற்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களை இங்கு ஆன்–லைனில் விற்கலாம். விலை கட்டுப்படியாகாத சமயங்களில் அங்கேயுள்ள குளிர்பதனக் கிடங்குகளில் வைத்து பாதுகாத்துக் கொள்ளலாம், அதற்கு ஒரு மாதத்திற்கு வாடகை ஏதும் கிடையாது. அங்கே விவசாயிகள், வியாபாரிகள் குளிப்பதற்கு, தங்குவதற்குத் தேவையான வசதிகளை செய்ய இருக்கிறோம். அதேபோல, அவ்விடத்திலேயே பணம் கிடைப்பதற்கு ATM வசதியும் செய்ய இருக்கின்றோம். இவையெல்லாம் விவசாயிகளின் நலனுக்காக எங்களுடைய அரசால் செய்யப்படுகின்றது. இங்கு மட்டுமல்லாமல், பரீட்சார்த்த முறையில் தமிழ்நாடு முழுவதும் 10 மாவட்டங்களில் விவசாயிகளின் நலன் கருதி, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஆங்காங்கே இந்தத் திட்டத்தை செயலாக்கத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைக்கு அருகில் ரூபாய் 2000 கோடியில் மிகப்பெரிய உணவுப் பூங்கா அமைக்கவிருக்கின்றோம். இதன் மூலம், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களுக்கு ஆன்–லைன் மூலம் விற்பனை செய்து நல்ல விலை கிடைப்பதற்கு அம்மாவின் அரசால் திட்டம் தீட்டப்பட்டு இன்றைக்கு செயலாக்கத்திற்கு கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளின் உபதொழிலாக இருக்கின்ற கால்நடை வளர்ப்பு சிறந்த முறையில் இருக்க வேண்டுமென்பதற்காக இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு கால்நடைத் துறை அமைச்சரை வெளிநாட்டிற்கு அனுப்பி அங்குள்ள புதிய

தொழில்நுட்பங்களை கண்டறிந்து, அதன் விளைவாக இன்றைக்கு சேலம் மாவட்டம், தலைவாசலில் சுமார் ரூபாய் 1000 கோடி மதிப்பீட்டில், 1200 ஏக்கர் நிலப்பரப்பில் ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடைப் பூங்கா ஒன்றை உருவாக்க இருக்கின்றோம். இதில், கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை ஆராய்ச்சி நிலையம் கட்டப்படவிருக்கின்றது. அங்கே கலப்பினப் பசுக்கள், ஆடுகள், கோழிகள், மீன்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய வசதிகளை உருவாக்கவிருக்கின்றது. நோய்த் தாக்குதலை தாங்கி, அதிகளவில் பால் கொடுக்கும் கலப்பினப் பசுக்களை உருவாக்கவுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

ரூபாய் 50 கோடியில் ஊட்டியில் விந்தணுக்களை பிரிந்து விவசாயிகளுக்குத் தேவையான கன்றுகளை ஈன்று வழங்கக்கூடிய தொழில்நுட்பத்துடன் கூடிய திட்டத்தை அம்மாவின் அரசு உருவாக்கி விவசாயிகளின் நீண்ட காலக் கனவையும் நிறைவேற்றியிருக்கின்றோம்.

இந்த அரசினை விவசாயப் பெருங்குடி மக்களின் அரசு என்று சொன்னால் அது மிகையாகாது. விவசாயிகளுக்குத் தேவையான அனைத்தையும் பார்த்துப் பார்த்து செய்கின்ற அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு கால்வாய்களை எல்லாம் சீரமைக்க வேண்டுமென்று விவசாயிகள், நான்கு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று, மேட்டூர் கிழக்கு கரை, மேற்கு கரை கால்வாய்கள் முழுவதையும், மேட்டூர்

அணையிலிருந்து அது முடிகின்ற எல்லை வரை கான்கிரீட் கால்வாயாக அமைக்கும் திட்டம் ரூபாய் 600 கோடியில் அம்மாவின் அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் பாசனத்திற்குப் பயன்படும் வகையில் இந்தத் திட்டத்தை அம்மாவின் அரசு செய்து கொண்டிருக்கின்றது. இங்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும் இது போன்று கான்கிரீட் கால்வாய்கள் உருவாக்கப்படும். டெல்டா பாசன கால்வாய்களையும் சீர் செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி கேட்டுள்ளோம், அந்த அனுமதி கிடைத்தவுடன் டெல்டா பாசன கால்வாய்கள் அனைத்தும் கான்கிரீட் கால்வாய்களாக மாற்றி அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 20 சதவிகிதம் தண்ணீர் வீணாகாமல் மிச்சப்படுவதோடு ஆண்டுதோறும் தூர்வாரும் நிலையும் மாறும்.

பொள்ளாச்சி பகுதியில் பரீட்சார்த்த முறையில் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனம் மூலமாக சுமார் 7,500 ஏக்கர் நிலத்தை எடுத்து, அதற்குத் தேவையான கருவிகளை அரசாங்கமே கொடுத்து, அந்தத் திட்டத்தை உருவாக்க இருக்கின்றது. ஒரு ஏக்கருக்கு பயன்படும் நீர் சொட்டு நீர்ப் பாசனம் மூலம் பாய்ச்சுகின்றபொழுது கிட்டத்தட்ட 7 ஏக்கர் நிலத்திற்கு பயன்படுகின்றது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அம்மாவின் அரசு திட்டமிட்டிருக்கின்றது. இவைகளெல்லாம், குறுகிய காலத்தில், நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து உங்களுக்காக செய்யப்பட்ட நல்ல திட்டங்கள் என்பதை தெரிவித்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படுகின்ற எங்கள் அரசு, அம்மா செயல்படுத்திய திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் விவசாயிகளிடம் கொண்டு சேர்த்திருக்கின்றோம். பண்ணைத் திட்டத்தையும் செயல்படுத்தியிருக்கின்றோம்.

இவ்வாறு, விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை வாரி, வாரி அம்மாவின் அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்து, இன்றைய தினம் **101** அடியை எட்டி, **66** டி.எம்.சி. தண்ணீரோடு இருக்கின்ற மேட்டூர் அணையிலிருந்து, டெல்டா பாசன விவசாயிகளின் மனம் குளிர இன்றைக்கு தண்ணீர் திறந்து விட்டிருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து, மிகச் சிறப்பாக, குறுகிய காலத்தில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த இந்தத் துறையின் செயலாளர் அவர்களுக்கும், தலைமைப் பொறியாளர் அவர்களுக்கும், முதன்மைப் பொறியாளர்களுக்கும், கண்காணிப்புப் பொறியாளர்களுக்கும் மற்றும் அரசு அலுவலர்களுக்கும், வருகை தந்த அத்தனைபேருக்கும் நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி.

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**